**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**

2025 ம் ஆண்டு **செப்டம்பர் மாதம் 24-**ம் தேதி வாதி தரப்பு சாட்சி **வா.சா.1-**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2024**

**வா.சா:-1 (சத்யா பிரியா)**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்):-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ., வரலாறு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்துவருகிறேன். எத்தனை வருடங்களாக பைனான்ஸ் தொழில் செய்துவருகிறேன் என்றால் 10 முதல் 15 வருடங்களாக பைனான்ஸ் தொழில் செய்துவருகிறேன். நான் என்னுடைய பைனான்ஸ் அங்கீகரிக்கப்பட்ட பைனான்ஸா என்றால் இல்லை. தனியார் பைனான்ஸ் ஆகும். அது தவிர தனியாக சீட்டு நடத்திவருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் நான் சொன்ன விவரங்களை கொண்டு தயார் செய்யப்பட்டவைதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் செலவு செய்து கட்டிய வீட்டை எனக்கு பாத்தியம் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். நான் கட்டிய வீட்டிற்கு எனது கணவர் எந்த வகையிலும் நிதி உதவி செய்யவில்லை. இந்த வழக்கில் எனது கணவர் என்ன பதில் போட்டுள்ளார் என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவாவில் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள வீட்டை காலி செய்துகொடுக்க கோரி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான். பிரதிவாதி தான் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எனக்கும், எனது கணவருக்கும் திருமணமாகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 27 வருடங்கள் ஆகிறது. எனக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் ஒரு பெண் உள்ளார். திருமணத்திற்கு முன்பாக என் கணவர் நடத்திவந்த கம்ப்யூட்டர் சென்டரில் வேலை பார்த்துவந்தேனா என்றால் சரிதான். எங்களது திருமணம் காதல் திருமணம் என்றால் சரியல்ல. ஏற்பாடு செய்து நடந்த திருமணம் தான். பிரதிவாதிக்கு எதிராக ஈரோடு, குடும்ப நல நீதிமன்றத்தில்

விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனு தாக்கல் செய்த பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 மாத இடைவெளியில் தாக்கல் செய்தேன். திருமணமான பிறகு எத்தனை வருடங்கள் பிரதிவாதியுடன் சுமூகமாக இருந்துவந்தேன் என்றால் திருமணமான நாள் முதலே பிரதிவாதியுடன் பிரச்சினையுடன் தான் இருந்துவந்தேன். தற்போது 2 வருடமாகத்தான் பிரதிவாதியை விட்டு பிரிந்து வாழ்ந்துவருகிறேன். பிரதிவாதியுடன் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தபோது எங்கு வசித்துவந்தோம் என்றால் 8 வருடம் திருச்செங்கோட்டில் வசித்துவந்தோம். அதன் பின்பு ஈரோட்டில் வசித்து வந்தோம். பிரதிவாதி தற்போது எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் திருச்செங்கோட்டிலுள்ள சீனிவாசம்பாளையம், கருவேப்பம்பட்டி அஞ்சல், க.எண்.5/113 சி என்ற வீட்டில் வசித்துவருகிறார். தாவா சொத்தில் பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா வீட்டின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 1049 அல்லது 1050 சதுரடி இருக்கும். தாவா வீட்டை எந்த வருடம் கிரயம் வாங்கினேன் என்றால் 18.11.2010–ல் கிரயம் வாங்கினேன். அந்த சமயத்தில் நான் வருமான வரி செலுத்திவந்தேனா என்றால் செலுத்திவந்தேன். வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,

Principal Subordinate Judge, Tiruchengode.